# பொதுக்காலம் 13ஆம் வாரம் - ஞாயிறு

# இரண்டாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

இறை இயேசுவில் அன்பிற்குரியவர்களே, இன்று பொதுக்காலம் 13ம் ஞாயிறு வழிபாட்டை சிறப்பிக்க வந்துள்ள உங்கள் அனைவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் அன்பான வணக்கங்கள்.

பன்னிரு ஆண்டுகளாய் இரத்தப்போக்கினால் வருந்திய பெண், இயேசுவின் ஆடையைத் தொட்டதும் தன் உடலில் நலம் அடைந்ததை உணர்கின்றார். பெருந்திரளான மக்கட்கூட்டத்தின் மத்தியில் இயேசுவும் தம்மிடம் இருந்து வல்லமை வெளியேறியதை உணர்ந்து, தன் ஆடையைத் தொட்டவர் யார்? என வினவுகின்றார். இத்தகைய உணர்தல் தன்மை இன்று நம்மிடையே எத்தகைய நிலையில் உள்ளது என்பதை கேட்டுப் பார்க்க வேண்டிய தருணம் இது. பிறரின் மனநிலையை எந்த அளவிற்கு நாம் உணர்ந்து, புரிந்து நடக்கின்றோம். மற்றவர்கள் எத்தகைய மனநிலையில் இருக்கிறார்கள் என்பதை உணராமல், எள்ளி நகையாடுவது, கோபப்படுவது, மனம் புண்படும் வார்த்தைகளைக் கூறுவது என நாம் உள்ளத்தில் உணவர்வற்றவர்களாய் செயல்படுகின்றோம். இறைமகன் இயேசு, கானாவூர் திருமணத்தில் தன் அன்னை மற்றும் திருமண வீட்டாரின் நிலையை உணர்ந்தவராக தண்ணீரை திராட்சை இரசமாக மாற்றித் தருகின்றார். நயீன் ஊர் கைம்பெண்ணின் மனநிலையை உணாந்தவராக, இயேசு அப்பெண்ணின் மகனை உயிர்ப்பித்துக் கொடுக்கின்றார். சக்கேயுவின் மனநிலையை உணர்ந்தவராக, “இன்று நான் உன் வீட்டில் தங்க வேண்டுமெனக் கூறி, மீட்பைக் கொடுக்கின்றார்.

ஆனால், இதற்கு மாறாக, குருவும், லேவியும் வழியில் அடிபட்டு கிடந்தவனின் நிலையை உணராதவர்களாகச் சென்றனர். ஏழை இலாசரின் பசியின் நிலை உணராதவராக செல்வந்தர் வாழ்ந்து வந்தார். நம் வாழ்வில் பிறரின் மனநிலையை உணர்ந்து. அவர்களுக்குத் தேவையான உதவிகளை செய்திட முற்படுவோம். அவர்களுக்கு ஆறுதலை, ஊக்கத்தை, உற்சாகத்தைத் தந்து, அவர்கள் மனம் மகிழச் செய்திடுவோம். எலிசபெத்தம்மாளின் தேவையை உணர்ந்து அன்னை மரியாள், மூன்று மாதங்கள் அவரோடிருந்து தேவையான உதவிகளைச் செய்தது போல, தொழுகைக்கூடத் தலைவரின் வேதனையை உணர்ந்தவராக, இயேசு அவரின் மகளைக் காப்பாற்றியது போல, நாமும் பிறரின் உணர்வுகளை, மனநிலையை உணர்ந்து, செயல்படக்கூடிய, ஈரமுள்ள இதயத்தினை, கனிவுள்ள மனதினைப் பெற்றிட, இந்தத் தூய அருட்பலியில் நம்மையே ஒப்புக் கொடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை: சாலமோனின் ஞானம் 1:13-15,2:23-24

நம்பிக்கைக்குரியவர்களே, இன்றைய முதல் வாசகம், மனிதர் அழியாமைக்கென்று கடவுளால் படைக்கப்பட்டவர்கள் என்ற கருத்தை முன் வைக்கிறது. கடவுள் தமது சாயலில், அதாவது நன்மைக்குரிய வாழ்வு வாழ மனிதரை உருவாக்கினார். அலகையின் சூழ்ச்சியால் உலகில் நுழைந்த பாவம் மனிதரை சாவுக்கு

ஆளாக்கியது என்றும் எடுத்துரைக்கின்றது. நாம் நிலைவாழ் வின் மக்களாக வாழ வரம் வேண்டி, இந்த வாசகத்துக்கு செவிமடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை: 2 கொரிந்தியர் 8:7,9,13-15

நம்பிக்கைக்குரியவர்களே,

இன்றைய இரண்டாம் வாசகம், இருப்பவர்கள் இல்லாதவர்களோடு பகிர்ந்து வாழ வேண்டும் என்ற கருத்தை முன் வைக்கிறது. செல்வராய் இருந்த இயேசு நம் பொருட்டு ஏழையானது போல, நாமும் பிறரது நன்மைக்காக நம்மை தாழ்த்திக்கொள்ள வேண்டு மென்று புனித பவுல் அழைப்பு விடுக்கிறார். நம்மிடம் மிகுதியாய் இருப்பதைக் கொண்டு பிறரது குறைகளை நீக்கும் வரம் வேண்டி, இந்த வாசகத்துக்கு செவிமடுப்போம்.

## மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

வழிகாட்டும் தெய்வமே இறைவா,

எம் நாட்டை ஆளும் தலைவர்கள், தன்னலமின்றி, பொதுநல நோக்குடன், மக்களுக்குத் தேவையான பல நல்ல வளர்ச்சிப் பணிகளைச் செய்திடவும், உண்மையுடனும், நேர்மையுடனும், நீதியுடனும் செயல்படவும், லஞ்ச, ஊழலற்ற நிர்வாகத்தினை பின்பற்றவும், வறுமை, ஏழ்மையில் துயருறும் மக்களுக்குத் தேவையான வாழ்வாதாரங்களைச் செய்து, நல்ல வேலைவாய்ப்புக்களை உருவாக்கித் தந்து, மக்கள் வாழ்வை வளம் பெறச் செய்திடக்கூடிய பரந்த, தன்னலமற்ற, உள்ளத்தைப் பெற்றிட, இறைவா, உம்ம மன்றாடுகின்றோம்.

அமைதியின் தெய்வமே இறைவா,

சாதி, மத, இனவெறியால் இன்று பல வன்முறைகள், தீவிரவாதங்கள் மேலோங்கி, குண்டுவெடிப்புக்களும், கொலை, கொள்ளைகளும் மக்களின் வாழ்வில் நிம்மதியற்ற நிலையை உருவாக்கி வருகின்ற இந்த உலகில், தவறான அத்தகைய நிலைகள் மாறிடவும், மறந்து, மறைந்து, மரத்துப்போன, மனிதநேய பண்புகள் இம் மண்ணில் மலர்ந்திடவும், உமது அமைதி இவ்வுலகில் எங்கும் நிறைந்திடவும் உமது அருளால் காத்திடவும் வேண்டி, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

வார்தையே வாழ்வான இறைவா,

உம் வார்த்தையை ஏற்று, நம்பிக்கையுடன் வாழ்ந்த ஆபிரகாமைப் போல, உம் வார்த்தையை ஏற்று, தன்னையே அர்ப்பணித்த அன்னை மரியைப்போல, நாஙகளும் இறைவனின் வார்த்தையை வாசிப்பதோடு இருந்துபோகாது, அதை வாழ்வாக்கி, முப்பது, அறுபது, நூறு மடங்கு பலன் தருபவர்களாக, இறைவனுக்கு உகந்தவர்களாக, இறைநம்பிக்கையிலே தளர்ந்திடாது, பாறைமீது கட்டப்பட்ட வீட்டைப்போல விசுவாசத்தில் உறுதியுடனிருந்து, இறையன்பை எங்கள் வாழ்வில் பிரதிபலிப்பவர்களாக வாழ்ந்திட, வரமருள வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

அற்புதங்களின் நாயகனே இறைவா,

தீராத, பல்வேறு உடல், உள்ள நோய்களினால் துன்புறும் நோயாளிகள் ஒவ்வொருவரையும் உம்பாதம் ஒப்புக் கொடுக்கின்றோம். அவர்கள் வாழ்வில் செய்த பாவங்களை உம் பேரன்பினால், இரக்கத்தினால்; மன்னித்து, அவர்களின் நோய்களைக் குணமாக்கி, பரிபூரண சுகம் தந்து, உம் அற்புதங்களையும், அதிசயங்களையும் உணர்ந்து, இறைவிசுவாசத்தில் உறுதியுள்ளவர்களாக, உமக்கு தம் வாழ்வில் என்றும் நன்றியறிந்த மக்களாக, உமக்கு நல்சாட்சிகளாக வாழ்ந்திடக்கூடிய, நல்இதயத்தை தந்தருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

“இதோ! நான் புதியன செய்கிறேன்” என்ற இறைவா,

எங்கள் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும், உமக்குகந்தவர்களாக வாழ முடிவெடுத்து, செயற்பட முற்படும்போதெல்லாம், ஊனுடலின் பலவீனம், வலுவின்மையினால், மீண்டும், மீண்டுமாக பாவமென்னும் சேற்றில் வீழ்ந்து, உமதன்பை, இரக்கத்தை, மன்னிப்பை எங்களுக்குச் சாததகமாக மாற்றி வாழும் நிலையகற்றி, எங்கள் வலுவின்மையிலே உமது வல்லமையை சிறந்தோங்கச் செய்து, தூய ஆவியின் வல்லமையில், வழிகாட்டுதலில், பாவ வாழ்வை முற்றிலுமாக வேரோடு களைந்தெறிந்து, புதுப்படைப்பாக, நாங்கள் ஒளியின் பாதையில் என்றும் பயணப்படக்கூடிய, தூயதோர் உள்ளத்தை, தந்தருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

Rev. Fr. Amirtha Raj Sundar J., amirsundar@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com